# மதுரமுரளி

Registered as Newspaper in India R. No. 62828 / 95

| Regd. No. TN / PMG (CCR) / 512 / 03 - 05 | Licensed to Post without prepayment WPP No. 319 |
|---|---|

| வேணு : 8 | பிப்ரவரி - 2003 | கானம் : 7 |
|---|---|---|





Published by V. Sankaran on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission, 24, Netaji Nagar, Jafferkhanpet, Chennai - 600 083 and Printed by Mrs. Sri. Kalaivani of Sri Maruthy Laser Printers, 200 (173), Peters Road, Chennai - 600 014. ✆ : 28522656 / 28524256. Editor : S. Sridhar.

website : www.madhuramurali.org ; e-mail : contact@madhuramurali.org


ஸ்ரீ ஹரி:

ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜியின்

# மதுரமுரளி

தெய்வீக மாதப் பத்திரிகை




| வேணு : 8 | பிப்ரவரி - 2003 | கானம் : 7 |
|---|---|---|


www.madhuramurali.org

ஸ்ரீ ஹரி:



கீர்த்தனாவளி பஜனை
மதுராபுரி ஆஸ்ரமம்
02.01.2003 முதல்
10.01.2003 வரை



பெருமாள் புறப்பாடு
மதுராபுரி ஆஸ்ரமம்
10.01.2003



கன்யாகுமரி
மாயம்மா ஸமாஜத்தில்
ஸ்ரீ ஸ்வாமிஜியின்
உபன்யாஸம்
15.01.2003

ஸ்ரீ ஹரி:

## ஃபிப்ரவரி மாதத்தில் ஸ்ரீ ஸ்வாமிஜியின் யாத்திரை விபரம்

1.2.2003 முதல் 3.2.2003 வரை } சென்னை – ப்ரேமிகபவனம், புது எண்: 2, பழைய எண்: 24, நேதாஜி நகர், ஜாபர்கான்பேட்டை, சென்னை – 600 083.

4.2.2003 முதல் 6.2.2003 வரை } மதுராபுரி ஆஸ்ரமம்

6.2.2003 : ஸ்ரீ கல்யாணஸ்ரீநிவாஸபெருமாள் வார்ஷிக ப்ரதிஷ்டாதின மஹோத்ஸவம் – மதுராரண்யம்

7.2.2003 முதல் 13.2.2003 வரை } மேற்கு மாம்பலம் அயோத்யா அச்வமேத மஹாமண்டபத்தில் உபன்யாஸம்
நேரம் : இரவு 7.00 முதல் இரவு 9.00 வரை

7.2.2003 ஸ்ரீ ஆதிசங்கரர்
8.2.2003 ஸ்ரீ பகவந்நாம போதேந்திரர்
9.2.2003 ஸ்ரீ ஸத்குரு ஸ்வாமிகள்
10.2.2003 காஞ்சி ஸ்ரீ மஹாபெரியவர்
11.2.2003 ஸ்ரீ ரமண மஹரிஷிகள்
12.2.2003 ஸ்ரீ ராமக்ருஷ்ண பரமஹம்ஸர்
13.2.2003 ஸ்ரீ சேஷாத்ரி ஸ்வாமிகள்

14.2.2003 முதல் 23.2.2003 வரை } மஹாராஷ்டிர யாத்திரை

24.2.2003 முதல் 26.2.2003 வரை } சென்னை – ப்ரேமிகபவனம்

27.2.2003 : மதுராபுரி ஆஸ்ரமம் (ஏகாதசி)

28.2.2003 முதல் 4.3.2003 வரை } மதுரை ஸ்ரீ மதனகோபாலஸ்வாமி கோயிலில் உபன்யாஸம்
நேரம்: இரவு 7.00 முதல் 9.00 வரை

5.3.2003 : சேலம் ஸ்ரீ ராமக்ருஷ்ணா மடத்தில் உபன்யாஸம்

| ஸ்ரீ ஸ்வாமிஜி தங்கியிருக்கும் இடம் | ஸ்ரீ ஸ்வாமிஜியின் தரிசன நேரம் |
|---|---|
| மதுராபுரி ஆஸ்ரமம் | காலை 9.00 – 11.00 மணி வரை<br>மாலை 4.00 – 6.00 மணி வரை |
| ப்ரேமிகபவனம் சென்னை | காலை 8.00 – 10.00 மணி வரை<br>மாலை 5.30 – 8.30 மணி வரை |

ஸ்ரீ ஹரி:

ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜியின்

# மதுரமுரளி

தெய்வீக மாதப் பத்திரிகை


வேணு : 8 | பிப்ரவரி 2003 | கானம் : 7


## விஷய ஸூசிகை


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | ஸ்ரீ ஸ்வாமிஜியின் கீர்த்தனம் | 2 |
| 2. | மதுரமான மஹனீயர் - 87 | 3 |
| 3. | பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிஜியின் பதில்கள் | 5 |
| 4. | வேத கதைகள் - 68 | 7 |
| 5. | எந்தரோ மஹானுபாவுலு - 58 | 9 |
| 6. | பெரியபெருமாளின் அரிய ஸேவையில் | 12 |
| 7. | ஸனாதனப் புதிர் - பகுதி - 22 | 17 |
| 8. | பாலகர்களுக்கு ஒரு கதை - 62 | 19 |
| 9. | மாலே மணிவண்ணா - 5 | 22 |
| 10. | ப்ருந்தாவனமும், நந்தகுமாரனும் - 13 | 24 |
| 11. | ஸ்ரீ ஸ்வாமிஜியின் ஸம்பாஷணைகளிலிருந்து - 89 | 28 |
| 12. | பக்தர்களின் கவனத்திற்கு ! | 31 |


ज्ञानोदयात्पुरारब्धं कर्म ज्ञानान्न नश्यति ।
अदत्वा स्वफलं लक्ष्य-मुद्दिश्योत्सृष्ट-बाणावत् ॥
व्याघ्रकदया विनिर्मुक्तो बाण: पश्चात्तु गोमतौ ।
न तिष्ठति छिनत्त्येव लक्ष्यं वेगेन निर्भरम् ॥

புலி என்று எண்ணி அதை அடிப்பதற்கு எய்யப்பட்ட அம்பானது, அது பசு என்று கண்டாலும் நிற்காமல் இலக்கை அடிக்கவே செய்யும். அதுபோல், ஞானம் அடைவதற்கு முன் செய்த கர்மாவானது, பிரம்ம ஞானம் அடைந்தாலும் தன் பலனை கொடுக்கத்தான் செய்யும்.

— விவேக சூடாமணியில் ஸ்ரீ ஆதிசங்கரர்

ஸ்ரீ ஹரி:

# ஸ்ரீ ஸ்வாமிஜியின் கீர்த்தனம்

ராகம் : ஹிந்தோளம் தாளம் : ஆதி

*பல்லவி*

***ஸ்ரீ ஹரியே எந்தன் குருவாவான்***
***பரிவுடன் என்னை ஆட்கொண்ட (ஸ்ரீ ஹரியே)***

*அனுபல்லவி*

***அறிவொன்றும் இல்லாத எந்தனை குறியாய்***
***குறையொன்றும் இல்லாத கோவிந்தனே கொண்டான்***
***(ஸ்ரீ ஹரியே)***

*சரணம்*

***அவன் ஆட்டிவைக்க நான் ஆடுகின்றேன்***
***அவன் இட்டபடி இருப்பதிலும் சுகம் ஒன்று உண்டு***
***ஒப்புயர்வில்லாத கோவிந்தனிடம்***
***ஒப்புவித்தேன் எந்தனை முரளீதரன் நானே***
***(ஸ்ரீ ஹரியே)***

---

*நாமாவளி*

***1. ஹரி ஹரி ஹரி ஹரி***
***ஹரி ஹரி ஹரி ஹரி***

***2. ஹரே ராம ஹரே ராம***
***ராம ராம ஹரே ஹரே ।***
***ஹரே க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண***
***க்ருஷ்ண க்ருஷ்ண ஹரே ஹரே ॥***

## 87

திருவனந்தபுரத்தில், ஆழ்வார்களால் மங்களாஸாஸனம் செய்யப்பட்ட ஸ்ரீ அனந்தபத்மனாபன் கோயில்கொண்டுள்ளான். இதன் பக்கத்தில் உள்ள வற்கலை என்ற தலத்தில், ஸ்ரீ ஜனார்த்தன ஸ்வாமியினுடைய ஆலயம் உள்ளது. ஸ்ரீ ஜனார்த்தனஸ்வாமி, ஆசமனம் செய்கின்ற நிலையில் இந்தக் கோயிலில் எழுந்தருளி இருக்கின்றார்.

திருவனந்தபுர கோயிலின் ஸமீபத்தில் ஸ்வாமி அபேதானந்தா ஆஸ்ரமம் அமைந்துள்ளது. ஸ்வாமி அபேதானந்தா, ராதாதேவியின் பரமபக்தர். அந்தரங்கத்திலே ஸதா ஸர்வகாலமும் 'ராதே, ராதே' என்று சொல்லிக்கொண்டிருப்பார். அவர் 'ஹரே ராம........' மஹாமந்திரத்தை எப்பொழுதும் சொல்லிக்கொண்டும், எல்லோரையும் சொல்ல வைத்துக்கொண்டும் வாழ்ந்த ஒரு மஹாத்மா. ராதாதேவியின் பிறந்த ஊரான உத்திரப்பிரதேசத்திலுள்ள பர்ஷானாவிற்கு அடிக்கடி சென்று தனிமையில் தங்கியிருப்பார். இவருடைய ஆஸ்ரமத்தில் கடந்த நாற்பத்துஐந்து ஆண்டுகளாக,

*''ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே |*
*ஹரே க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண க்ருஷ்ண க்ருஷ்ண ஹரே ஹரே ||*

மஹாமந்திர கீர்த்தனம் விடாமல் அகண்டமாக நடந்து கொண்டிருக்கின்றது.

ஸமீபத்தில், திருவனந்தபுரம் சென்றிருந்த ஸ்ரீ ஸ்வாமிஜி, ஸ்ரீ அனந்தபத்மனாபஸ்வாமியை தரிசனம் செய்துவிட்டு ஸ்வாமி அபேதானந்த ஆஸ்ரமத்திற்குச் சென்றார்கள். அங்கு மாடியில் ஒரு பெரிய தீபம் எரிந்துகொண்டிருந்தது. ஒரு இளம் வயது பக்தர் கையில் அழகாக ஒரு தம்புராவை மீட்டிக்கொண்டு, அதை வலம் வந்துகொண்டே மஹாமந்திரம் ஜபம் செய்து கொண்டிருந்தார். அந்த இடத்திற்குச் சென்றவுடன் ஸ்ரீ ஸ்வாமிஜிக்குத் தன்னையறியாமல் ஒரு பரவசம் ஏற்பட்டது. அந்த இடத்தில் பகவானுடைய ஸாந்நித்யம்

பூரணமாக இருப்பதை உணர்ந்தார்கள். தன்னை மறந்து அந்த இடத்தில் மஹாமந்திரத்தைச் சொல்லிக்கொண்டே அங்கபிரதக்ஷிணம் செய்தார்கள். ஸ்வாமி அபேதானந்தா ஆஸ்ரமம் சென்று வந்த பிறகு, ஸ்ரீ ஸ்வாமிஜி, எப்பொழுதும் அந்த இடத்தில் உள்ள பகவானுடைய ஸாந்நித்யத்தை வியந்து பேசி வருவார்கள். ஹோமம், தியானம், யாகம் என்று எதுவும் இல்லாமல் மஹாமந்திர கீர்த்தனத்தினால் மட்டுமே ஒரு இடத்தில் பகவானுடைய ஸாந்நித்யம் ஏற்படும் என்பதற்கு இந்த ஆஸ்ரமமே தக்க சான்று என்று கூறினார்கள்.

(தொடரும்)

- ஜயந்தி ஜானகிராமன்

---

ஸ்ரீ ஹரி:

மஹாரண்யம் ஸ்ரீ கல்யாணஸ்ரீநிவாஸபெருமாள் திருக்கோயில்

வார்ஷிக ப்ரதிஷ்டாதின மஹோத்ஸவம்

**(முதலாம் ஆண்டு குடமுழுக்கு நிறைவுவிழா)**

தேதி : 06.02.2003, வியாழக்கிழமை

ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களால் நிர்மாணிக்கப்பட்டு மஹாஸம்ப்ரோக்ஷணம் (குடமுழுக்கு) செய்யப்பட்ட மஹாரண்யம் ஸ்ரீ கல்யாணஸ்ரீநிவாஸபெருமாளின் வார்ஷிக ப்ரதிஷ்டாதின மஹோத்ஸவம் நடைபெற உள்ளது. இந்த மஹோத்ஸவத்தில் ஸ்ரீ ஸ்வாமிஜி கலந்துகொள்கிறார்கள்.

**நிகழ்ச்சி நிரல்**

**மதியம் 2.00 மணி** **ஸ்ரீ கல்யாணஸ்ரீநிவாஸபெருமாளுக்கு திருமஞ்சனம்**

**மாலை 4.00 மணி** **ஸ்ரீ ஸ்வாமிஜியின் ஆன்மீக அருளுரை**

**இடம்**

**ஸ்ரீ கல்யாணஸ்ரீநிவாஸபெருமாள் திருக்கோயில்**

மாகாணியம் கிராமம் (மஹாரண்யம்) மலைப்பட்டு, படப்பை - 601 301.
காஞ்சிபுரம் மாவட்டம்.

**மார்க்கம் : தாம்பரம் - ஸ்ரீபெரும்புதூர், பேருந்து நிறுத்தம் - மலைப்பட்டு பேருந்து எண் - 55S, 55N, வேல்முருகன், பாரதி டிரான்ஸ்போர்ட்**

# பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிஜியின் பதில்கள்

*கேள்வி : என்னிடம் ஒருவர் தன்னுடைய குருநாதரைப் பற்றி பேசிக்கொண்டிருந்தார். அப்பொழுது அவர், தன்னுடைய குருவானவர் தினமும் மூன்று மணிநேரம் பூஜை செய்வார் என்றும், இரண்டு மணிநேரம் ஜபம் செய்வார் என்றும் பெருமையாகப் பேசினார். இதைக் கேட்டவுடன் எனக்கு, ''இதில் வியப்பதற்கு என்ன இருக்கின்றது. உலகத்தில் எவ்வளவோ நபர்கள் எட்டுமணி நேரம், பத்து மணி நேரம், பன்னிரண்டு மணிநேரம் என்றெல்லாம் கூட அலுவலகத்தில் வேலை பார்க்கும் பொழுது ஏதோ இரண்டு அல்லது மூன்று மணிநேரம் பூஜை செய்வதை வியந்து கூறுவது ஏன்'' என்று தோன்றியது. நான் நினைத்தது சரிதானே?*

ஸ்ரீ ஸ்வாமிஜி : நீங்கள் நினைத்தது தவறு. எட்டு மணி நேரம், பத்து மணிநேரம், பன்னிரண்டு மணிநேரம் என்று அலுவலகத்தில் எந்த வேலையைச் செய்தாலும் அவர்கள் செய்வது உலகியல் வேலைதானே. உலகத்தை ஒட்டி ஓடுவது மனதின் இயல்பு. மனதின் இயல்பை ஒட்டி எத்தனை நேரம் வேண்டுமானாலும் வேலை செய்யலாம். மனதை தெய்வீகத்தில் ஈடுபடுத்துவது என்பது அதன் இயல்பிற்குப் புறம்பானது. ஆகவே, அப்படி ஜப, தியானத்தில் ஒருமுகமாக ஒரு மணிநேரம் ஈடுபட்டாலும் கூட அது பெரிய விஷயம்தான். உதாரணமாக, நாம் இரவில் நம் நண்பர்களுடன் அரட்டை அடித்துக் கொண்டிருப்போம். நேரம் போவதே தெரியாது. நாம் பேச ஆரம்பித்து அரைமணிநேரம்தான் ஆகியிருக்கும் என்று நினைப்போம். ஆனால், மூன்று மணிநேரம் ஆகியிருக்கும். அதே சமயம் நாமா சொல்லவோ, கீர்த்தனம் செய்யவோ ஆரம்பியுங்கள். ஒரு மணிநேரம் ஆனது போல் உங்களுக்குத் தோன்றும். ஆனால், ஐந்து நிமிடங்கள்தான் ஆகியிருக்கும்.

***கேள்வி : தவம் செய்யக்கூடிய விஸ்வாமித்திரர் போன்றவர்களை இந்திரன் ஏன் கலைக்க வேண்டும்?***

பதில் : உலகப் பொருள்களைச் சேர்த்து வைத்துக்கொள்வது என்பது எப்படி ஒரு உடைமையோ, அது போல் தவம் என்பதும் ஒரு உடைமைதான். பொருள் உள்ளவர்களைப் பார்த்து இல்லாதவர்களுக்கு பொறாமையும், போட்டியும் எப்படி ஏற்படுமோ, அதுபோல் தவம் உள்ளவர்களை பார்த்தும் இல்லாதவர்களுக்கு போட்டியும், இவர் நம்மை மிஞ்சி விடுவாரோ என்ற பயமும் ஏற்படும். அதனால்தான் இந்திரன் விஸ்வாமித்ரரின் தவத்தைக் கலைத்தான். ஞானம்தான் இயல்பானது. அதை பார்த்துதான் யாரும் போட்டியும், பொறாமையும் அடையமுடியாது. அப்படியே அடைந்தாலும் அந்த ஞானத்தைக் கலைக்கவும் முடியாது. எப்பொழுது தவத்திற்கு சேமிப்பும் செலவும் உண்டோ, அப்பொழுதே அது இயல்பானது அல்ல என்பதை நம்மால் நன்றாகப் புரிந்துகொள்ள முடிகின்றது.

***கேள்வி : மூதாதையர்கள் செய்த பாவங்கள் அவர்களுடைய சந்ததியை வந்து சேரும் என்று சொல்கின்றார்களே. இது எப்படி நியாயமாகும்?***

பதில் : மூதாதையர்களுடைய சொத்து எப்படி அவர்களுடைய சந்ததியைத்தான் வந்து சேருமோ, அப்படித்தான் மூதாதையர்கள் செய்த பாவ, புண்யங்களும் அவர்களுடைய சந்ததியை அடையும்.

***கேள்வி : ஸ்ரீமத் பாகவதம், ராமாயணம் இவற்றையெல்லாம் வீட்டில் பாராயணம் செய்யலாமா? நமக்கு பாராயணம் செய்யத் தெரியாது என்றால் தகுந்தவர்களைக் கொண்டு பாராயணம் செய்யச் சொல்லலாமா?***

பதில் : ஸ்ரீமத் பாகவதம், ராமாயணம் இவற்றையெல்லாம் வீட்டில் அவசியமாக பாராயணம் செய்ய வேண்டும். அப்படிச் செய்யும் பொழுது, பாகவதம், ராமாயணம் போன்றவற்றை நித்ய பாராயணம் செய்து கொண்டிருப்பவர்களைக் கொண்டு செய்தால் அதிக பலன் ஏற்படும். அதற்கான அதிகாரிகளைக்கொண்டு செய்யும்பொழுது பலன் அதிகப்படும். ராமாயணத்தில் புத்ரகாமேஷ்டி யாகம் செய்ய விரும்பும் தசரதரை, வசிஷ்டரே ரிஷ்யசிருங்கரைக் கொண்டு தான் செய்யச் சொல்லுகின்றார். அப்பொழுதுதான் பலன் ஏற்படும் என்கின்றார்.

# வேத கதைகள் - 68

- தர்மஜ்ஞர், வாங்முக ஸார்வபௌம, மேலக்காவேரி

ப்ரஹ்மஸ்ரீ பஞ்சாபகேஶ ஶாஸ்த்ரிகள்

## வேதி நிர்மாணம்

தேவர்களும், அசுரர்களும் ப்ரஜாபதியின் பிள்ளைகள். அசுரர்கள், இந்த உலகமானது தங்களைத்தான் சார்ந்தது என்று கூறினர். அப்பொழுது தேவர்கள், நாங்களும் ப்ரஜாபதியின் பிள்ளைகள்; ஆதலால், பூமியை பிரித்து இருவரும் பங்கு கொள்வோம் என்று ஒப்பந்தம் செய்துகொண்டனர். அப்பொழுது அதை ஏற்றுக்கொண்டு அசுரர்கள், ஒட்டகத்தின் தோள்களால் கிழக்கு மேற்காக பிரித்து அளந்தனர். அசுரர்கள் பூமியை அளப்பதை அறிந்த தேவர்கள் அங்கு வந்தனர். அசுரர்கள் கபடமாக இந்த பூமி முழுவதும் தங்களுக்கே இருக்க வேண்டும், தேவர்களுக்கு இதில் பங்கு கூடாது என்ற எண்ணத்துடன் பூமியை அளந்தனர். இதனால் வருத்தம் அடைந்த தேவர்கள், யக்ஞஸ்வரூபியான விஷ்ணுவை முன்னிட்டு, தங்களுக்கு பூமியில் பங்குகொள்ள எண்ணினார்கள்.

தேவர்கள், அசுரர்களை நோக்கி, ''இந்த விஷ்ணுவானவர் படுத்துக் கொண்டால் தங்களுக்கு எவ்வளவு இடம் உண்டோ அவ்வளவு இடம் எங்களுக்கு அளித்தால் போதும்'' என்று வேண்டினர். அதை அசுரர்களும் ஒப்புக்கொண்டார்கள். அப்பொழுது விஷ்ணுவானவர், சிறிய உருவம் உள்ள வாமனராக இருந்தார். அந்த வாமனர் படுத்தால் எவ்வளவு இடம் ஏற்படுமோ அந்த இடம் தங்களுக்குப் போதுமானது என்று தேவர்கள் கூறுவதால் தேவர்களுக்கு மிகவும் குறைவான இடம்தான் கிடைக்கும். தங்களுக்கு அதிகமான இடம் கிடைக்கும் என்று எண்ணியவர்களாக அசுரர்கள், விஷ்ணுவை வைத்து பூமியை அளந்தனர். அப்பொழுது, விஷ்ணு விச்வரூபம் எடுத்தார். விச்வரூபம் எடுத்த விஷ்ணுவை அளவுகோலாக்கி உலகம் முழுவதையும் தங்களைச் சார்ந்ததாக ஆக்கிக்கொண்டு தேவர்கள் வெற்றி பெற்றனர்.

நான்கு பக்கமும் விஷ்ணுவை வைத்து அளந்ததால் விஷ்ணுவிற்கு வாட்டம் ஏற்பட்டது. அதனால் விஷ்ணு மறைந்தார். மறைந்த விஷ்ணுவை யாவரும் தேடினர். அப்பொழுது மந்திரங்களின் பலத்தால் மறைந்த விஷ்ணுவை கண்டுபிடித்தனர். மறுபடியும் தேவர்களுக்கும், அசுரர்களுக்கும் போர் ஏற்பட்டது. அப்பொழுது பூமியின் யாகத்திற்கு உகந்ததான பாகத்தை சந்திரனிடத்தில் வைப்போம் என்று எண்ணி சந்திரனிடத்தில் வைத்தனர். சந்திர மண்டலத்தில் தெரிகிற கருப்பான பாகம்தான் பூமியிலிருந்து எடுக்கப்பட்ட யாகத்திற்குரிய பாகமாகும். ஆதலால், யாகத்திற்குரிய வேதி நிர்மாணம் செய்யும்பொழுது, ''யதத: சந்த்ரமணி க்ருஷ்ணம் ததிஹ அஸ்து'' என்ற மந்த்ரம் கூறி சந்த்ர மண்டலத்தில் உள்ள யாகத்திற்குரிய பூமி பாகத்தை வேதியில் வரச்செய்கின்றனர். இதன் கருத்தை வேதத்தின் மற்றொரு இடத்தில் வேறுவிதமாகக் கூறியிருக்கிறது.

ஒரு காலத்தில், ஆகாயம், பூமி இரண்டும் ஒன்றாகவே இருந்தன. ஒன்றாக இருந்ததால் பூமியின்மேல் யாராலும் நடமாட முடியவில்லை. எல்லோரும் நடமாடுவதற்காக இருவரையும் பிரிந்து செல்லுமாறு வேண்டினர். அவ்விதம் எல்லோருடைய வேண்டுகோளுக்கிணங்கி இருவரும் பிரிந்தனர். அப்பொழுது பூமி தன் நினைவுப் பொருளாக கருப்பு மண்ணை சந்திரனுக்கு அளித்தது. சந்திரன் தன் நினைவு பொருளாக வெள்ளை மணலை பூமிக்கு அளித்தது. பூமியில் உள்ள யாகத்திற்குரிய பாகமானது, இன்றும் சந்த்ர மண்டலத்தில் கருப்பு மண்ணாக விளங்குகிறது. இந்த வரலாறு, ''த்யாவா ப்ருதிவி ஸஹ ஆஸ்தாம் தேவியதி அப்ரூதா'' என்ற இடத்தில் நன்கு கூறப்பட்டுள்ளது.

இதை ஒட்டிதான் ஒரு தம்பதிகள் பிரிந்து செல்லும்போது பெண்ணின் ஒரு அடையாளமான பொருளை புருஷன் எடுத்துக்கொள்கிறான். புருஷனின் ஒரு அடையாளமான பொருளை பெண் வைத்துக்கொள்கிறாள். இவ்விதம் செய்வது வேதத்திலேயே கூறப்பட்டுள்ளது.

# எந்தரோ மஹானுபாவுலு - 68

ஜகாயி, மதாயி இருவரின் உத்தாரணத்திற்குப் பிறகு மஹாப்ரபு தனது எல்லா காரியங்களையும் துறந்துவிட்டு எந்நேரமும் ஸ்ரீவாஸ் பண்டிதர் வீட்டிலேயே தங்கி நாம ஸங்கீர்த்தனம் செய்து வரலானார். தனது பக்தர்களுடன் ஸ்ரீமத் பாகவதத்திலுள்ள அனைத்து லீலைகளையும் அபிநயம் செய்வார். ஒவ்வொருத்தருக்கு ஒரு வேஷம் கொடுத்து தானும் ஒரு பங்கேற்று பாவத்துடன் லீலைகளை அனுகரணம் செய்வார். ஒரு சமயம், மஹாப்ரபு புவனமோஹினி ஸ்ரீலக்ஷ்மியின் வேஷத்தை எடுத்துக் கொண்டார். நேர்வகிடெடுத்து அவரது சுருள் சுருளான கேசத்தை அழகாகப் பின்னி விதவிதமான நறுமலர்களால் பக்தர்கள் அலங்காரம் செய்தனர்.

ஏற்கனவே தங்கமயமான வர்ணத்துடன் மின்னும் ப்ரபு அன்று அழகிய அலங்காரங்களுடன் வர்ணிக்க இயலாத பொலிவுடன் திகழ்ந்தார். அலங்காரம் செய்துகொள்ளும்பொழுதே ப்ரபுவிற்கு ஸ்ரீருக்மிணியின் பாவாவேசம் ஏற்பட்டுவிட்டது. க்ருஷ்ண விரஹத்தால் தவித்து, ''ச்ருத்வா குணான் புவனஸுந்தர'' என்ற பாகவத ஸ்லோகங்களை தன் நகங்களால் எழுத ஆரம்பித்தார்.

சிறிது நேரம் கழித்து அவரது ஆவேசம் குறைந்ததும் மேடைக்கு நித்யானந்தருடன் சென்றார். ப்ரபுவின் அத்புத லாவண்ய ரூபத்தைக் கண்ட பக்தர்கள் ஆச்சர்யத்தால் வாய்பிளந்து ரசித்தனர். அனைவரும், ப்ரபுவை சீதையாக, ராஸவிஹாரிணியாக, லக்ஷ்மியாக, பார்வதியாகக் கண்டனர். அனைவரின் மனதிலும் மாத்ரு ஸ்னேஹ பாவம்தான் நிறைந்திருந்தது. ஒருவர் மனதிலும் வேறு சிந்தனையே இல்லை. ப்ரபு, லக்ஷ்மி பாவத்தில் கீர்த்தனம் செய்து நடனமாடினார். அவரது குயிலினும் இனிய குரலும் அலௌகிகமான நடனமும் பத நளினமும் அனைவரையும் ஆனந்தப்படச் செய்தது. அனைவரது கண்களிலிருந்தும் கண்ணீர் பெருகியது. ஸ்த்ரீ பக்தைகளும் கண்கொட்டாமல் அவரைக் கண்டு பரவசப்பட்டனர்.

ஒரு சமயம் ப்ரபு, விஷ்ணு பாவத்தில் முராரிகுப்தாவை ‘‘கருடா, கருடா!’’ என்றழைத்தார். உடனே முராரி குப்தா, தனது மேல் வஸ்த்ரத்தை இரண்டு பக்கத்திலும் இறக்கை போல் விரித்துக் கொண்டு ப்ரபுவை தன்தோளில் எழுந்தருளப் பண்ணிக்கொண்டு முற்றம் முழுவதும் சுற்ற ஆரம்பித்தார். பக்தர்களுக்கு, அன்று ப்ரபு ஸாக்ஷாத் கருடன் மேல் அமர்ந்திருக்கும் சதுர்புஜ நாராயணனாக சங்க சக்ர கதா பத்மத்துடன் காட்சி அளித்தார். பக்தர்கள் ஆனந்த மேலீட்டால் நடனமாடினார்கள். சசீமாதா, மாலதிதேவி போன்ற பெண்மணிகள் பயந்தேவிட்டனர். சிறிது நேரத்தில், ப்ரபுவிற்கு வெளி ஞானம் ஏற்பட்டது. உடனே கீழே இறங்கிவிட்டார்.

முராரி குப்தா, ஸ்ரீராமனின் உபாஸகர். ப்ரபுவிற்கு அவரது நிஷ்டையைப்பற்றி நன்கு தெரியும். ஆனாலும், மற்ற பக்தர்களுக்கு அதைப் புரிய வைக்க எண்ணி ஒருநாள் அவர் முராரிகுப்தாவிடம் ‘‘முராரி! ராமரும் க்ருஷ்ணரும் ஒன்றேதான். பகவானின் அனந்த ரூபங்கள்தான் இவையும். பகவானின் எந்த ரூபத்தையும் நாமத்தையும் உபாஸனை செய்தாலும் முடிவில் பகவத் ப்ராப்தி ஒன்றேதான். ஆனாலும், ஸ்ரீராமனின் லீலைகளைவிட ஸ்ரீக்ருஷ்ணனின் லீலைகள் ரஸமானவை. எனவே, நீயும் ஸ்ரீராமனின் லீலைகளை விட்டுவிட்டு ஸ்ரீக்ருஷ்ண லீலைகளை உபாஸனை செய்வாய்.’ ஸ்ரீக்ருஷ்ண லீலைகளையே நீ அனுபவிக்க வேண்டும் என்பதுதான் எனது மனமார்ந்த ஆசை. இன்றிலிருந்து நீ ஸ்ரீக்ருஷ்ணனையே எல்லாம் நினைத்து அர்ச்சனை, பூஜை, பஜனை, த்யானம் எல்லாம் செய்’’ என்றார்.

ப்ரபுவின் ஆணையை சிரமேற்கொண்டு முராரிகுப்தாவும் அப்படியே செய்ய ஆரம்பித்தார். ஆனால், பிறவியிலிருந்தே ராம உபாஸனை செய்து பழகிய முராரிகுப்தாவின் மனம் இப்போது கொந்தளிக்க ஆரம்பித்தது. மனதில் உறைந்தவிட்ட ராம பக்தியையும் உபாஸனையையும் எளிதில் விலக்க முடியவில்லை. குருவின் ஆணையையும் மீறமுடியவில்லை. தர்ம ஸங்கடத்தில் ஆழ்ந்த அவர் இரவு முழுவதும் கண்ணீர் பெருக்கியே உறங்காமல் கழித்தார்.

மறுநாள், ப்ரபுவிடம் சென்று தீனமாக பணிவுடன், ‘‘ப்ரபோ! நான் எனது தலையை ஸ்ரீராமனுக்கு விற்றுவிட்டேன். ராமனின் சரணங்களைத் தொட்ட தலையால் வேறு யாரை மறுபடி தொடமுடியும்? நான் தற்கொலை செய்துகொள்கிறேன். என்னால் ராம உபாஸனையை

பரித்யாகம் செய்யமுடியாது. உங்களது ஆணையை மீறும் ஸாமர்த்தியமும் என்னிடம் இல்லை'' என்று கூறி விக்கி விக்கி அழுதார். ப்ரபு இந்த நிலையைக்கண்டு மிகவும் ப்ரஸன்னமாகி, ''முராரி! நீ தன்யன்! உன்னிடம் எப்பேர்ப்பட்ட நிஷ்டை இருக்கிறது! எனக்கும் இப்படிப்பட்ட நிஷ்டை ஸ்ரீக்ருஷ்ணனின் பாதபத்மங்களில் ஏற்பட வேண்டுமென்று ஆசீர்வாதம் செய்'' என்று கூறி அவரை ஆலிங்கனம் செய்துகொண்டார்.

(தொடரும்)

- ஜயந்தி ஜானகிராமன்

---

ஸ்ரீ ஹரி:

## மதுரமுரளி சந்தா

''மதுரமுரளி'' மாத இதழுக்கு புதியதாக சந்தாதாரராக விரும்புபவர்கள் தொடர்புகொள்ள வேண்டிய முகவரி :

''மதுரமுரளி'', ப்ரேமிகபவனம், New No. 2, Old No. 24, நேதாஜி நகர், ஜாபர்கான்பேட்டை, சென்னை - 83.

சந்தா விவரம் : ஆண்டு சந்தா ரூ. 60/-

ஆயுள் சந்தா ரூ. 1000/-, தனி ப்ரதி ரூ. 5/-.

வெளிநாடு ஆண்டு சந்தா : ரூ. 300/-

மதுரமுரளி இதழுக்கான சந்தாவை, ''குருஜி ஸ்ரீ முரளீதர ஸ்வாமிகள் மிஷன்' என்ற பெயரில் மட்டுமே M.O. or DD. ஆக அனுப்பவேண்டும். தயவுசெய்து காசோலையாக அனுப்ப வேண்டாம். மணி ஆர்டரில் பணம் அனுப்பும்பொழுது, பெயர், முகவரி, மதுரமுரளி சந்தா எண் முதலியவற்றை "Space for Communication"ல் கட்டாயம் எழுத வேண்டும்.

மதுரமுரளிக்கான தங்களுடைய சந்தாவை புதுப்பிப்பவர்கள் (Renewal) தங்களுடைய முழு முகவரியுடன், தயவுசெய்து தங்களுடைய சந்தா எண்ணை குறிப்பிட்டு Subscription Renewal என்று எழுதி அனுப்பவும். சந்தாதாரரின் முகவரியில் மாறுதல் ஏற்படும்பொழுது உடனுக்குடன் அதை மிஷனுக்கு தெரிவிக்க வேண்டுகிறோம்.

Email address : contact@madhuramurali.org

# பெரியபெருமாளின் அரிய ஸேவையில்

- ஸ்ரீ ஸ்வாமிஜி

திருக்கோயிலூரை அடுத்த தபோவனத்தில், ஸ்ரீ ஞானானந்த ஸ்வாமிகள் என்றொரு மஹாத்மா ஸமீபகாலம் வரையில் அருள் பாலித்து வந்தார். அவருடைய ஸமாதி இன்றும் அங்கு அமைந்து உள்ளது. இன்று அது தரிசனத்திற்காக வரும் பல பக்தர்களுக்கு க்ஷேத்திரமாக விளங்குகிறது. ஸ்ரீ ஞானானந்தஸ்வாமிகளிடம் தூத்துக்குடியைச் சேர்ந்த ராஜமாணிக்கம்நாடார் என்பவர் அளவற்ற பக்தி கொண்டிருந்தார்.

ஒருநாள், ஞானானந்தஸ்வாமிகளைக் காண சில பக்தர்கள் வந்திருந்தார்கள். ஞானானந்தஸ்வாமிகள் அவர்களுடன் பேசிக் கொண்டிருக்கையில், வந்திருந்தவர்கள், அவர்கள் யாத்திரையாக கன்யாகுமரி சென்று வந்ததை தெரிவித்தார்கள். உடனே ஞானானந்த ஸ்வாமிகள்,'' கன்யாகுமரியில் ஒரு ரத்னம் உள்ளதே பார்த்தீர்களா? கன்யாகுமரியில் அம்மன் கோயிலில் இல்லை. வெளியில் கடற்கரையில் உலாவிக்கொண்டிருக்கின்றாள். அழுக்கு உடை அணிந்திருப்பாள். அவளைச் சுற்றி எப்பொழுதும் நாய்கள் இருக்கும்'' என்றெல்லாம் கூறிக்கொண்டு இருந்தார்கள்.

அப்பொழுது, அங்கிருந்த தூத்துக்குடி ராஜமாணிக்கம்நாடார் அதைக் கேட்டுக்கொண்டிருந்தார். அவர் கன்யாகுமாரி சென்று ஞானானந்தஸ்வாமிகள் கூறியது போலவே இருந்த மாயம்மாவைக் கண்டு தரிசனம் செய்து, அவருடைய அருளுக்கு பாத்திரமானார். கன்யாகுமரியில் முக்கடல் ஸங்கமிக்கும் இடத்திலேயே மாயம்மாவிற்கு ஒரு ஸமாஜமும் எழுப்பினார்.

தற்பொழுது அந்த ஸமாஜம் தொடங்கி இருபத்தைந்து வருடங்கள் பூர்த்தியானதை ஒட்டி, வெள்ளிவிழா ஆண்டாக கொண்டாடப்படுகின்றது. இந்த தருணத்தில் ராஜமாணிக்கம்நாடார் பெயரால் அங்கு ஒரு மண்டபமும் கட்டப்பட்டு, அதற்கு திறப்பு விழாவும் நடைபெற்றது. ராஜமாணிக்கம்நாடாரைப் போலவே

அவருடைய குடும்பம் முழுவதும் இன்றும் கூட தங்களை ஸாதுக்கள் தொண்டில் முழுவதுமாக ஈடுபடுத்திக்கொண்டு உள்ளார்கள்.

இந்த விழாவிற்கு என்னையும் அழைத்திருந்தார்கள். ஜனவரி பதிமூன்றாம் தேதி தசமியன்று காலை சென்னையிலிருந்து கிளம்பினேன். மாலையில் ஸ்ரீரங்கம் சென்று பெருமாளை சேவிக்கலாம் என்று திட்டம். மாலையில் ஸ்ரீரங்கத்திற்குள் நுழையும் பொழுதே ஒரே கூட்டம்! என்னவென்று இறங்கிப் பார்த்தால் பெருமாள் கருடவாஹனத்தில் எழுந்தருளி இருந்தார். தைமாத கருட சேவை! பெருமாள், அம்மா மண்டபம் பக்கத்தில் உள்ள தோப்பிலிருந்து கிளம்பி கோவிலுக்கு எழுந்தருளுகின்றார். பாண்டியன் கொண்டை, கையில் கத்தி, கேடயம் எல்லாவற்றுடனும் பெருமாள், சற்று சாய்ந்தாற்போல் தலையை வைத்திருந்த கருடன் மேல் இரு கால்களையும் தொங்கப் போட்டுக்கொண்டு அழகாக அமர்ந்திருந்தார். கருடாழ்வார் கத்தி வைத்திருந்தார்.

முக்கியமான வீதியில் ஏதோ அஸம்பாவிதம் நடந்து விட்டதால் பெருமாள் அன்று ஸ்ரீரங்கத்தில் உள்ள சிறிய தெருக்களில் எல்லாம் கூட நுழைந்து வந்தார். ஆங்காங்கே பக்தர்கள், கூட்டம் கூட்டமாகக் கூடி பெருமாளை ஸேவித்தனர். பலர், பெருமாளுடனே நடந்து வந்தனர். பார்ப்பவர்கள் ஒருவருக்கொருவர், ''பெருமாள் எங்கு வந்து கொண்டிருக்கின்றார்?'' என்று விசாரித்துக்கொண்டனர். பெருமாளுக்கு ஒரே ஒரு மாலை மட்டுமே அணிவித்திருந்தார்கள். பெருமாளுடைய திருவடிகளை கருடாழ்வார் கைகளில் தாங்கிப் பிடித்திருந்தார். அதில் ஒரு பூ குஞ்சலம் தொங்கவிடப்பட்டிருந்தது.

பெருமாளுடன் நடந்து வந்தது மிகவும் ஆனந்தமாக இருந்தது. பெருமாளை பக்கத்தில் இருந்து ஸேவிப்பேன். பிறகு சற்று தூரம் சென்று ஸேவிப்பேன். தூரத்திலிருந்து ஸேவிக்கும்பொழுதுதான் அவருடைய நடை அழகை நன்றாக அனுபவிக்க முடியும். பிள்ளைஉறங்காவில்லிதாஸர் இப்பொழுது இல்லையே என்று நினைத்துக் கொண்டேன். அவர் பெருமாள் புறப்பாடு ஆகும்பொழுது, எப்பொழுதும் கையில் ஒரு கத்தியுடனே அந்த புறப்பாட்டில் கலந்துகொள்வாராம். ஏன் என்றால், பெருமாள் மேல் ஏதாவது ஈ, கொசு, உட்கார்ந்தால் கூட தன்னையே குத்திக்கொண்டு விடுவாராம்.

அவருக்கு அப்படி ஒரு முரட்டு பக்தி! அன்று, வைஷ்ணவர்களே பெருமாளை எழுந்தருளப் பண்ணியிருந்தார்கள். பெரிய மேளக்கச்சேரி இல்லை. நாதஸ்வரம் தூரத்தில் வாசித்துக்கொண்டு சென்றார்கள். ஒரு ஒத்தை பறை கொட்டு மட்டும் இருந்தது. பச்சை கலர் மத்தாப்பு மட்டும் அவ்வப்பொழுது கொளுத்திக்கொண்டே வந்தார்கள். ஒரே ஒரு தங்கக்குடை. ஆனாலும், இந்த காட்சி என்னை என்னவோ செய்துவிட்டது. ஒருபுறம் உள்ளுக்குள் ஆனந்தம். மறுபுறம் பெருமாளின் கருணையை நினைத்து அழுகை.

கல்யாணமான அன்று தன் அழகான கணவனுடன் வீதியில் நடந்து செல்லும் ஒரு பெண்ணுக்கு எத்தனை பெருமிதம் இருக்குமோ, அத்தனை பெருமிதம் எனக்கு அன்று இருந்தது. அது ஏதோ ஒரு புறப்பாடு என்று தோன்றவில்லை. பெருமாளுடன் கையைப் பிடித்துக்கொண்டு நான் வீதியில் நடப்பதாகவே தோன்றிற்று. வீதியில் வரும்பொழுது பார்த்தால் முன்னும் பின்னும் வேதபாராயண, பிரபந்த பாராயண கோஷ்டி; நடுவிலே பெருமாள்; இரண்டு பக்கமும் கைகூப்பி பெருமாள் முகத்தையே பார்த்துக் கொண்டு தொழுதவாறு பக்தர்கள். வைகுண்டம் இப்படித்தான் இருக்குமோ என்று தோன்றிற்று! அங்கு இருந்த பக்தர்களும், வைஷ்ணவர்களும் என்னை ஆசையுடனும், அன்புடனும் அழைத்து அழைத்துப் பெருமாளை ஸேவித்து வைத்தார்கள். பெருமாள் வாகன மண்டபத்தில் எழுந்தருளினார். காவிரியில் நீராடி மாலை அனுஷ்டானங்களை முடித்துக்கொண்டேன்.

மறுநாள், காலையில், ஐந்தேகால் மணிக்கெல்லாம் சேஷவாஹனத்தில் புறப்பாட்டை சேவித்தேன். நான்கு வீதிகளிலும் பெருமாள் வலம் வந்து வாகன மண்டபத்திற்கு ஒரு மணி நேரத்திற்குள் வந்துவிட்டார். மிட்டாய் கலரில் ஒரு அங்கி மட்டும் அணிந்திருந்தார்.

சமீபத்தில் கீர்த்தனாவளியை அத்யயன உத்ஸவத்தில் பாடியிருந்தோம் அல்லவா? அதில் முதல் பாட்டு ரங்கநாதனை பாதத்திலிருந்து தலை வரையில் வர்ணிக்கும் கீர்த்தனமாகும். பத்து நாட்களும் கண்களை மூடிக்கொண்டு மனதினால் ரங்கநாதனை தியானம் செய்துகொண்டே பாடுவேன். அதன் பலனோ என்னவோ,

மறுநாள் காலையில், அதாவது ஏகாதசி அன்று ரங்கநாதரின் முதல் தரிசனம் எனக்குத்தான். முரளிப்பட்டர் ஸேவித்து வைத்தார். மார்கழி மாதம் ஆதலால் பெரிய பெருமாள் முப்பது நாளும் அங்கி அணிந்திருந்தார்.

பச்சை கலரில், ரோஸ் கலர் ஜரிகை வேலை செய்த அங்கி. தங்க கிங்கிணிகளால் அலங்கரிக்கப்பட்ட பாதங்கள் இரண்டையும் ஸேவித்தேன். பாதம் இரண்டையும் சேர்த்து வைத்துக்கொள்ளாமல் சற்றே விலக்கி வைத்துள்ளான். அந்த பாதங்களுக்கு மத்தியில் உள்ள இடத்தில் நான் போய் இருக்கலாகாதா என்று ஏங்கினேன். பகவானுடைய கை, முகமண்டலம், மந்தஹாஸம், ஆதிசேஷன் என்று ஒன்றுஒன்றாக அனுபவித்தேன். பாதத்தையும், முகத்தில் உள்ள மந்தஹாஸத்தையும் மாறி மாறி பார்த்தேன். சற்று நேரம் சன்னிதியிலேயே அமர்ந்துவிட்டேன். பாதங்களைப் பார்த்துக் கொண்டே மானஸிகமாக 'விஶ்வஸ்மை நம: விஷ்ணவே நம:' என்று அர்ச்சனை செய்தேன். சிறிது நேரம் த்வாதஶாக்ஷரி ஜபம் செய்தேன். பெருமாளைப் பிரிய மனமில்லாமல் பிரிந்தேன்.

இந்த பெருமாளுடன்தானே ஆண்டாள் கலந்தாள். திருப்பாணாழ்வார் கலந்தார். நானும் அத்தகைய பக்தி செய்து, விடாமல் ஜபம் செய்தது அப்படி பெருமாளுடன் கலந்து விடமாட்டேனா? வேதபாடசாலை, திவ்யதேசம், ஆஸ்ரமம், நாமப்ரசாரம், இவையெல்லாம் எப்படியாவது போகட்டும்; இந்த ஸ்ரீரங்கத்திலேயே அமர்ந்துகொண்டு ஜபம் செய்துகொண்டிருக்கலாமா? அத்தகைய பாக்யம் நான் செய்யவில்லை போலும். இந்த ஸ்ரீரங்கத்தின் வீதியில்தான் குலசேகராழ்வார், 'நான் ஒரு நாயாகவாவது இருக்கமாட்டேனா?' என்று கேட்கின்றார். தொண்டரடிப் பொடியாழ்வாருக்காக இவர்தான் வட்டிலை எடுத்துக்கொண்டு தேவதேவியின் வீட்டிற்குப் போனாரா? இப்படியெல்லாம் மனதில் எண்ண ஓட்டங்கள்.

தாயார் சன்னதிக்கு வந்தேன். புரட்டாசி மாதம் நடந்த நவராத்திரி உத்ஸவத்தின்போது இந்த தாயார்தான் எனக்கு தியானத்தில் வந்து காட்சி கொடுத்து என்னுடன் ஸம்பாஷித்தாள். அந்த விஷயத்தை இப்பொழுது எழுத முடியாது. தாயாரை

ஸேவித்துவிட்டு ஸ்ரீரங்கத்திலிருந்து கிளம்பி அத்தாளநல்லூருக்கு வந்தேன்.

மாலையில் தாமிரபரணியில் ஸ்நானம் செய்தேன். அங்கு தாமிரபரணி உத்திரவாஹினி. வடக்கு நோக்கி ஓடுகின்றது. அங்கு உள்ள பெருமாள் கஜேந்திரனுக்கு மோக்ஷம் கொடுத்த பெருமாள். அவரையும் ஸேவித்தேன். அந்த ஊரில் உள்ள குழந்தைகளில் சிலர் அழகாக மஹாமந்திர கீர்த்தனை செய்தனர். மறுநாள் காலை கிளம்பி நேராக திருக்குறுங்குடி நம்பியை ஸேவிக்கச் சென்றேன். அந்த பட்டர் என்னை வாசலிலேயே வந்து அழைத்துச் சென்றார். பெருமாளை நன்றாக ஸேவை பண்ணி வைத்தார். பெருமாளுடைய வடிவழகில் நான் மயங்கி நின்றுகொண்டிருந்தபொழுது, பெருமாள் வக்ஷஸ்தலத்தில் இருந்த மாலை, 'பொத்'தென்று கீழே விழுந்தது. அதைப் பார்த்ததும் எனக்கு அழுகையே வந்துவிட்டது. இந்த அளவு க்ருபை போதும் என்று சந்தோஷப்பட்டேன்.

அங்கிருந்து கிளம்பி, கன்யாகுமரி மாயம்மா ஸமாஜத்தில் உரை நிகழ்த்திவிட்டு எர்ணாகுளம் சென்றேன். சேதுராமன் அவர்கள் வீட்டில் தங்கிவிட்டு, பொள்ளாச்சி, சேலம், பள்ளிப்பாளையம் வழியாக சென்னை வந்து சேர்ந்தேன்.

*With Best Compliments from*

**POORNIMA ENTERPRISES**

Sales & Service

No. 98, Margosa Road, CITI Bank Building
Malleswaram, Bangalore - 3. Tel. : 3346041, Fax : 3349928

**Prop. C.R. RANGAN**

Authorised dealers since 1974 for
Eifco Machine Tools Pvt. Ltd. Coimbatore

**Manufacturers of Drilling Machine, Power hacksaw,
Gear Hobbing Machine, Slotting etc.**

# ஸனாதனப் புதிர் - பகுதி - 22

தொகுப்பு : **''ஆத்ரேயன்'',** சென்னை.

1. பகவத் கீதையில் ''ஈ'' என்ற (ई) எழுத்தில் ஆரம்பிக்கும் ஸ்லோகங்கள் எத்தனை? அத்தியாயம், ஸ்லோகம் / எண் குறிப்பிடுக.
2. ஒரு குழந்தை ஆறு மாதம் ஆணாகவும், ஆறுமாதம் பெண்ணாகவும் மாறி மாறி இருந்தது. குழந்தையின் ஆண் / பெண் பெயர்கள் என்ன? பெற்றோர்களின் பெயர் என்ன?
3. ஒரு அரசர் (ஆண்) கர்ப்பம் தரித்து குழந்தை பிறந்தது. அந்த அரசரின் பெயர் என்ன?
4. பிரம்மாவின் வயது எப்படி கணக்கிடப்படுகிறது? சூர்ய சித்தாந்த முறையில் கூறவும்.
5. பகவத்கீதை 'ய' என்ற (य) எழுத்தில் ஆரம்பிக்கும் ஸ்லோகங்கள் எத்தனை?
6. வால்மீகி இராமாயணத்தில் ''யத்ருச்சயா'' (யதேச்சையாய் - by chance) என்ற பதம் இருமுறை வருகிறது. இதன் முக்கியத்துவம் என்ன? வரும் இரண்டு இடங்கள் எவை?
7. லக்ஷ்மணன் அயோமுகியை எப்படி தண்டித்தார்?
8. மஹாத்மா காந்தியால் ஆன்மீக அகராதி என்று போற்றப்பட்ட நூல் எது?
9. ஸ்ரீ க்ருஷ்ணனது பிள்ளையான சாம்பன் தனக்கு ஏற்பட்ட குஷ்டரோக நிவர்த்திக்காக ஒரு கடவுளைத் தொழுதான். அந்தக் கடவுள் யார்? எந்த இடத்தில் பிரார்த்தனை செய்தான்?
10. ஔரங்கசீப் அழித்த பிந்துமாதவர் கோயில் எங்கு இருந்தது? மற்றொரு கோவிலை இடித்துவிட்டு அதன் மேல் 'கத்ரா மசூதியை''க் கட்டினான். அந்த கோயில் பெயர் என்ன? இருந்த இடம் என்ன?
11. கர்ணதேவ சாளுக்யன் ஏழாவது நூற்றாண்டில் மஹாலக்ஷ்மி தேவிக்கு ப்ரஸித்திபெற்ற கோயில் ஒன்றைக் கட்டினார். அந்தக் கோயில் எங்கு இருக்கிறது?
12. 1787ல் கயாவில் விஷ்ணுபாதர் கோயிலைக் கட்டிய மராத்திய அரசி யார்?

---

ஸனாதனப் புதிர் பகுதி - 22க்கான பதில்களை பிப்ரவரி 24-ந் தேதிக்குள் ஸனாதனப் புதிர், மதுரமுரளி என்ற பெயரில் மிஷனுக்கு அனுப்ப வேண்டும்.

ஸனாதனப் புதிர் - பகுதி - 21க்கான சரியான
பதில்களை அனுப்பி பரிசு பெற்றவர்கள் விவரம்

முதல் பரிசு ரூ. 250/- (தலா ரூ. 125/-)

1. Sri. Vasudevakrishnan, A2, Paras Apts. Shanthi Colony, 11, Jeevarathinam Nagar, Adyar, Chennai - 20.
2. Sri. S. Saranathan, 21, Ranganathan Street, Nehru Nagar, Chrompet, Chennai - 44.

இரண்டாம் பரிசு ரூ. 150/- (தலா ரூ. 75/-)

1. Sri. C. Krishnaswami, 23 (New No. 32), Jambulingam Street, Chennai - 34.
2. Sri. S. Janakiraman, 14, Balaram Nagar, Fazilguda, Hyderabad - 47.

மூன்றாம் பரிசு ரூ. 100/- (தலா ரூ. 50/-)

1. C. Prakash, Sandeepani Gurukulam, Madhurapuri Ashram, Padappai - 601 301
2. R. Padmavathy, 4, Gandhi Road, Srirangam, Trichy - 620 006.

*With Best Compliments from*

**MAGNA CHEMICAL MANUFACTURERS PVT LTD.**

A-112/113, PIPDIC Industrial Estate,
Mettupalayam, Pondicherry - 605 009
✆ 371 171, 371 932, 274 753
Fax : 0413-371633

Quality Manufacturers and Exporters of Sodium Bisulphite, Sodium Meta Bisulphite, Sodium Sulphite Superfine, Sodium Sulphite technical, Sodium Carbonate anhydrous, Sodium Carbonate monohydrate, Sodium Thiosulphate anhydrous.

# பாலகர்களுக்கு ஒரு கதை -62

மஹாபாரதத்தில், பகைவர்களை வெல்ல வெவ்வேறு உபாயங்களைக் கையாள்வது எப்படி என்ற திருதராஷ்டிரனின் கேள்விக்கு, விளக்கமளிக்கத் தொடங்கிய கணிகர், பின்வரும் அழகான கதையைச் சொன்னார்.

''ஒரு காட்டில் புலி, ஓநாய், கீரி, எலி - ஆகியவற்றோடு ஒரு நரி நட்புறவு கொண்டிருந்தது. இப்படி நான்கு நண்பர்களுடன் கூடியிருந்தாலும், அந்த நரி சுயநலவாதியாக இருந்தது. ஒருநாள், காட்டில் இந்த ஐந்து மிருகங்களும் ஒரு மான் கூட்டத்தைக் கண்டன. அந்த மான் கூட்டத்தின் தலைவன் கொழுத்திருந்தது. அதைப் பிடித்துத் தங்களுக்கு உணவாக்கிக்கொள்ள இந்த மிருகங்கள் விரும்பினாலும், அந்த மானின் வேகத்தின் காரணமாக அது இயலாத காரியமாக இருந்தது. அந்த மானைப் பிடிப்பது எப்படி என்று ஐந்து நண்பர்களும் யோசித்தன.

அப்பொழுது நரி, புலியிடம், ''நீ எவ்வளவு முயன்றாலும் இந்த மானைப் பிடிக்க உன்னால் முடியாது. நான் ஒரு வழி சொல்கிறேன். அந்த மான் தூங்கிக்கொண்டிருக்கும்போது, எலி அதன் காலைக் கடித்துவிட வேண்டும். புண்பட்ட காலுடன் அந்த மான் வேகமாக ஓட இயலாமல் தவிக்கும். அந்த நிலையில் நீ மானைப் பிடித்துவிட முடியும். நீ அதைக் கொன்றபின், நண்பர்களாகிய நாம் ஐவரும் விருந்து உண்ணலாம்'' என்று ஓர் உபாயம் கூறியது. இந்த யோசனையைப் புலி அங்கீகரித்தது. எலி சென்று மானின் காலைக் கடித்தது. அதன் பிறகு புலி பாய்ந்து சென்று மானைப் பிடித்துக் கொன்றது.

இறந்து கிடந்த மானை ஐந்து மிருகங்களும் சூழ்ந்து கொண்டன. அப்போது நரி, மற்ற நான்கு மிருகங்களிடம், 'நான் இங்கே காவல் இருக்கிறேன். நீங்கள் நால்வரும் சென்று நதியில் குளித்துவிட்டு வாருங்கள். அதன் பிறகு நான் சென்று குளித்துவிட்டு வருகிறேன். பிறகு எல்லோருமாகச் சேர்ந்து இந்த விருந்தை உண்போம்' என்று கூறியது. மற்ற நான்கு மிருகங்களும் சென்றபிறகு, நரி தீர்க்கமாக யோசித்து ஒரு முடிவுக்கு வந்தது.

முதலில் புலி திரும்பி வந்தது. அப்பொழுது நரி சோகமாக அமர்ந்திருந்தது. 'நரியே! நாம் விருந்துண்ணப் போகும் வேளையில், நீ எதற்காக வருந்த வேண்டும்?' என்று புலி கேட்டது. அதற்கு நரி, காலம் கெட்டுவிட்டது. பலசாலியாகிய உன்னைப் பற்றி சிறிய எலி என்ன சொல்லிற்று தெரியுமா? நான் மானைக் கடித்ததால்தானே, புலியினால் அந்த மானை அடித்து வீழ்த்த முடிந்தது. என் பலத்தினால் புலிக்கு இன்று ஆகாரம் கிடைத்தது. அதற்கு வெட்கமுமில்லை, ரோஷமுமில்லை என்று கூறிவிட்டது. உனக்கு நேர்ந்த இந்த அவமானத்தை நினைத்துதான் நான் வருத்தப்படுகிறேன் என்று கூறியது.

இப்படி நரி கூறியவுடன் புலி, ''இது எனக்கு மிகப்பெரிய அவமானம். இந்த மானை நான் உண்ணப் போவதில்லை. எலி போன்ற எதற்கும் உதவாத ஜந்துவிடம் அவச்சொல் வாங்கியாவது பசியாற வேண்டிய அவசியம் எனக்கில்லை. இனி நானே முழுவதும் என் முயற்சியால் வீழ்த்தும் மிருகங்களைத்தான் புசிப்பேன்'' என்று கூறிக் கோபமாகச் சென்றுவிட்டது.

அதற்கு அடுத்து எலி அங்கே வந்தது. அதனிடம் நரி, ''எலியே! இந்த கீரி என்ன சொன்னது தெரியுமா? புலியின் நகங்கள் பட்டதால் இதில் விஷம் ஏறி இருக்கிறது என்று கூறி, அதனால் இதை உண்ண மறுத்துச் சென்றுவிட்டது. கீரியின் வார்த்தையைக் கேட்ட பிறகு, எனக்கு அதை உண்ண மனமில்லை. நீ என் நண்பனல்லவா? அதனால் உன்னிடம் ஒரு ரகசியம் சொல்கிறேன். நீயும் ஜாக்கிரதையாக இரு. ஏனென்றால் இந்த மானைப் உண்ண மனமில்லாத கீரி, தன் பசியைத் தீர்த்துக்கொள்ள உன்னைத்தான் குறி வைத்திருக்கிறது'' என்று கூறியது. இப்படி நரி கூறியவுடன், தன்னைக் காப்பாற்றிக் கொண்டால் போதும் என்று எலி ஓடிவிட்டது.

அடுத்து ஓநாய் வந்தது. நரி அதனிடம், ''நண்பா, ஒரு ரகசியம் சொல்கிறேன். புலி உன்மீது மிகவும் கோபமாக இருக்கிறது. தன் மனைவியுடன் வந்து இன்று உன் கதையை முடிக்கப் போகிறதாம். அதனால், நீ விரைவாக இந்த மானைப் உண்டு விட்டு ஓடிவிடு!' என்று கூறியது. மானை உண்டுக் கொண்டிருந்தால் நேரமும்

வீணாகும்; புலியின் கோபமும் அதிகரிக்கும் என்று எண்ணிப் பயந்த ஓநாய், உயிருக்கு பயந்து அங்கிருந்து ஓடி விட்டது.

இறுதியாகக் கீரி வந்தது. அதனிடம் நரி, 'வா! உனக்காகத்தான் காத்திருக்கிறேன். என்னுடன் சண்டையிட்டு வெல்ல முடியாமல், ஓநாயும், புலியும், எலியும் ஓடிவிட்டன. நீ ஒருவன்தான் மீதமிருக்கிறாய். உன்னால் முடியுமென்றால் என்னுடன் சண்டையிட்டு ஜெயித்து இந்த மானைப் புசித்துக்கொள்' என்று சவால் விட்டது. கீரி, 'பலமுள்ள புலி, கோபமுள்ள ஓநாய், புத்தியுள்ள எலி எல்லோருமே உன் தந்திரமான தாக்குதலால் தோல்வியுற்று ஓடியிருக்கும்போது, என்னால் மட்டும் உன்னை வெல்ல முடியுமா? நீயே இந்த மானைப் புசித்துக்கொள்' என்று கூறிச்சென்றுவிட்டது. அதன் பிறகு தனது தந்திரம் பலித்ததை எண்ணி மகிழ்ந்துகொண்டே தனியாகவே அந்த முழுமானை நரி புசித்தது.

அரசர்களும் இப்படித்தான் நடந்துகொள்ள வேண்டும். ஒவ்வொரு எதிரியை வீழ்த்த ஒவ்வொரு வழிமுறை தேவைப்படும். கோழைகளைப் பயத்தினாலும், தைரியசாலிகளைத் தந்திரத்தினாலும், பேராசைக்காரர்களைப் பொருளினாலும், தனக்குக் கீழானவர்களைப் பலத்தினாலும் வெல்ல வேண்டும்.

---

Visit us at www.madhuramurali.org for

1. Detailed reports of major mission / satsang events with pictures viz. Utsavams, Samprokshanams, Thirthayatras, Bhagavatha Sapthaham.
2. Online Spiritual magazine "Madhura Murali" every month in English/Tamil.
3. Satsang news & updates on mission activities.
4. Sri Swamigal's lectures/essays
5. Articles on religion, Philosophy, lives of saints.
6. Downloadable free audio "Hare Rama......." Mahamantra chanting rendered in various raagas & more.

# மாலே மணிவண்ணா - 5

- மகாவித்துவான், மயிலம் வே. சுப்பிரமணியன்.

திருவேங்கடமுடையானைத் தரிசிக்கச் செல்பவர்களுக்குப் பாரம்பரியமான நியதி ஒன்றுண்டு. எம்பெருமானது தீர்த்தமாகிய கோனேரியின் கரையில் எழுந்தருளியிருக்கின்ற ஆதிவராகப் பெருமாளைத் தரிசனம் செய்த பிறகே திருவேங்கடம் உடையானைத் தரிசிக்கச் செல்ல வேண்டும் என்பதே அந்த நியதி.

அப்படி என்ன அந்தப் பெருமாளுக்கு விசேஷம் என்று கேட்கத் தோன்றுகிறதல்லவா? அதைச் சொல்ல வருகிறது பரிபாடலின் இந்த இரண்டாம் பாடல். நாம் வாழ்வதற்கும், எம்பெருமானை வழிபட்டுப் பேறு பெறுவதற்கும் ஈறிலன்பப் பெருவாழ்வை அடைவதற்கும் ஆதாரமாகிய இந்த உலகத்தை எடுத்து நிறுத்திய பெருமாள் ஆதிவராகப் பெருமாள். படைப்போன் பிரமன்; துடைப்போன் சிவன்; காப்பவன் திருமால் இது நாம் அறிந்தது. ஆனால் பிரமனாய்ப் படைப்பவனும், சிவனாய்த் துடைப்பவனும், திருமாலாய்க் காப்பவனும் அவன் ஒருவனே என்பது ஆழ்வார்களும் முனிவர்களும் நமக்கு அருளியது.

'ஒன்றிரண்டு மூர்த்தியாய்' என்பர் திருமழிசைப்பிரான். 'ஆவியும் ஆக்கையும் தானே, அழிப்போடு அளிப்பவன் தானே' என்பர் நம்மாழ்வார்.

*''யவரும் யாவையும் எல்லாப் பொருளும்*
*கவர்வின்றித் தன்னுள் ஒடுங்க நின்ற*
*பவர் கொள் ஞான வெள்ளச் சுடர்மூர்த்தி*
*அவர் எம் ஆழியம் பள்ளி யாரே''*

என்கிறது நம்மாழ்வார் பாசுரம். எல்லாப்பொருளும் நாரணனிடத்திலே ஒடுங்குகின்றன. ஒடுங்கிய இடத்திலிருந்தே மீளத் தோன்ற முடியும். ஆதலின் அவனே இந்த உலகை மீண்டும் ஆதிவராகமாகி நிலை நிறுத்துகிறான் என்கின்ற அரிய செய்தியைப் பரிபாடலின் இரண்டாம் பாடல் புதிய அறிவியல் முறையில் நமக்குக் காட்டுகிறது. இப்பாடல் ஆசிரியர் கீரந்தையார் என்னும் சங்ககாலப் புலவர். கீரன்

தந்தை என்பது கீரந்தை என வரும். கீரன் என்னும் பெயருடைய சங்கப்புலவர்கள் பலருளர், நக்கீரனாரும் அவருள் ஒருவரே. நக்கீரரைக் குறிக்கும்போது அவர் 'மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார்' என்றே குறிப்பிடப்படுகிறார். எனவே, இவர் வேறொரு கீரன் என்னும் பெயருடைய சங்கப்புலவரின் தந்தையாக இருக்கக்கூடும் என்று கருதலாம். கீரந்தையாருடைய இந்த இரண்டாம் பாடல் திருமால் வாழ்த்தாக மலர்ந்து திருமாலை வேண்டி முடிகிறது - அரிய செய்திகள் பலவற்றை நமக்குச் சொல்கிறது. ஒவ்வொன்றாக அச்செய்திகளைக் காணலாம்.

பகலினும் இரவினும் மாறிவருதலை உடைய சூரியனும் சந்திரனும் ஆகிய ஒளிக்கதிர்கள் ஒடுங்கின; ஆகாயம் அழகிழந்தது. மண்ணுலகும் விண்ணுலகும் மறைந்தொடுங்கின; உலகம் இல்லையேல் இடைவெளியாகிய ஆகாயமும் இல்லை என்பதுதானே பொருள். இரண்டு பக்கமும் தடைச்சுவர் இருந்தால் இதன் இடையே உள்ள வெற்றிடத்தை ஆகாயம், வெளி என்று கூறலாம். உலகம் அனைத்தும் ஒடுங்கியிருப்பது என்ற நிலையில் வெளி என்பது ஒன்றும் இல்லையல்லவா? எல்லாம் ஒடுங்கிவிடுகிறபோது ஆகாயமும் இல்லையாய் ஒடுங்கிவிட்டது என்கிறது அறிவியல் நோக்கில் ஆழ்ந்து கருத்து. இந்த விஞ்ஞான உண்மைப்பட ''விசும்பு கெட்ட ஊழிகள்'' என்கிறது பரிபாடல்.

'விசும்பு' என்றால் ஆகாயம். இப்படி ஆகாயமும் இல்லாமல் போன காலங்கள், யுகங்கள் பலபல முறையாகக் கழிந்தன. காற்று, நெருப்பு, நீர், நிலம் முதலிய நான்கு பூதங்களின் நுண் அணுக்களாகிய மூலக்கூறுகள் ஒன்றில் ஒன்றாக நிலம், நீர், நெருப்பு, காற்று என ஒடுங்கி எல்லாம் விசும்பில் ஒடுங்கி அந்த விசும்பும் மற்றவை இன்மையால் தானும் இல்லையாகிப் போன யுகங்கள் பலவாயின. இதனைக் 'கருவளர் வானம்' என்கிறது பரிபாடல். கரு என்பது மூலக்கூறாகிய பரமாணு. பரமாணுக்கள் தன்னிடமிருந்து வளர்தற்கிடனான ஆகாயம். உருவு காணப்படாத நிலையில் உள்ளது. மற்ற பூதங்கள் இருந்தால் ஆகாயம் காணப்படும் நிலை உண்டு. மற்றவை இல்லாதபோது, 'ஆகாயம்' என்பது ஒன்று தனித்து அறியப்படாததாக இருக்கிறது என்பது அறிவியல் அடிப்படையில் அமைந்த உலக ஒடுக்கம். இத்தகைய யுகங்கள் பல சென்றபிறகு மீண்டும் உலகத் தோற்றத்துக்குரிய சங்கற்பம் அதாவது நினைவு எம்பெருமானுக்கு உண்டாகிறது. (தொடரும்)

# ப்ருந்தாவனமும் நந்தகுமாரனும் - 13

கிழக்கு வங்காளத்தில் பாபானா மாவட்டத்திலுள்ள தனாஸா என்ற ஊரில் ஸ்ரீகங்காப்ரஸதாராயர் என்ற ஆன்மீகவாதி இருந்தார். அவர் தன் மனைவியுடன் பூரி க்ஷேத்ரத்திற்கு கால்நடையாகவே தீர்த்தயாத்திரைக்குச் சென்றார். அப்பொழுது, அவர் மனைவி கர்ப்பமாக இருந்தாள். அவர்களுக்கு வனமாலிலாலா என்ற நல்ல ஸம்ஸ்காரமுள்ள ஆண் குழந்தை பிறந்தது. குழந்தையாக இருந்தபோதே தன் மகனை அந்த ஊர் ஜமீன்தாரான ராஜா பன்வாரி லாலுக்குத் தத்து கொடுத்துவிட்டு பெற்றோர்கள் ப்ருந்தாவனத்துக்கு பஜனை செய்வதற்காகச் சென்றுவிட்டனர்.

வனமாலிலாலாவுக்கு 17 வயது ஆனதுமே ராஜாபன்வாரி இறந்துவிட்டார். ஆகவே, ஜமீன் பொறுப்புகள் வனமாலிலாலாவின் மேல் வந்து விழுந்தது. ஒரு நல்ல ஜமீன்தாராக அவர் தனது மக்களை அன்புடன் நடத்தினார். குளம், கிணறுவெட்டுதல், சத்திரம் சாவடி ஏற்படுத்துதல், பள்ளிக்கூடம், ஆஸ்பத்திரி கட்டுதல் போன்ற நிறைய நல்ல காரியங்களை செய்தார். மனதுக்குள் அவருக்கு எப்போதும் ஆன்மீக தாகம் இருந்தது. ப்ரஹ்ம சம்ப்ரதாயத்தின் பாதிப்பு ஏற்பட்டு அந்த சம்ப்ரதாயத்தின் உபதேசங்களை கடைப்பிடித்து வந்தார்.

அவரது குடும்ப தெய்வ விக்ரஹத்திற்கு ஸ்ரீராதவினோத்ஜி என்று பெயர். இவர் முதன்முதலாக நவகிராமம் என்ற கிராமத்தின் அதிகாரியான வனசராம்ஜி என்பவரால் மர்மமாக கண்டெடுக்கப்பட்ட மூர்த்தியாவார். வனசராம்ஜி நல்லபக்தர். தினமும் கரதோயா என்ற நதியில் நீராடச் செல்வார். ஒருநாள் நீராடும்போது யாரோ இனிய குரலில், ''என்னை நீரிலிருந்து எடுத்து உன் வீட்டிற்குக்கொண்டு போ'' என்று கூறுவது கேட்டது. சுற்றுமுற்றும் பார்த்தும் வனசராம்ஜிக்கு யாரும் கண்ணில் தென்படவில்லை. அவர் நீராடி வீட்டிற்குச் சென்றுவிட்டார். ஆனால், அவரது செவிகளில் அந்தக்குரல் ரீங்காரமிட்டுக்கொண்டே இருந்தது. மறுநாள் நீராடச் செல்கையில் மறுபடியும் அதே குரல் கேட்டது. ஆனால், அந்தக்குரல் எங்கிருந்து வருகிறது என்றே அவருக்குத் தெரியவில்லை. மூன்றாம் நாள் அவர்

குளித்துவிட்டு வெளியேறுகையில் அதே குரல் மறுபடியும் கேட்டது. கூடவே காலில் ஏதோ இடறுவதையும் உணர்ந்தார். உடனே குனிந்து அதை எடுத்தார். என்ன ஆச்சர்யம்! ராதாவினோத்ஜியின் விக்ரஹம்தான் அது! சிறிது நேரம் ஆச்சர்யமும் பரவசமும் அடைந்தார்! பிறகு அந்த விக்ரஹத்தை ப்ரேமையுடன் ஆரத்தழுவிக்கொண்டார். கண்ணீர் பெருக மேனி சிலிர்க்க வியர்க்க அதைக்கட்டிக்கொண்டு மறுபடி நீராடினார். ராதாவினோத்ஜிக்கும் இப்படிப்பட்ட பக்தன் கிடைத்ததில் பேரானந்தம் போலும்! பக்தனின் ப்ரேமையை அனுபவிக்க பக்தனின் காலையே தொட்டுவிட்டானே! அவனுக்கு பக்தர்கள் மீது தீராக் காதல்! காதலுக்குத்தான் கண் ஏது!

வனசராம்ஜி கண்ணனை வீடு கொண்டுவந்து சேர்த்தார். கொண்டாட்டமாக அவனை ஸ்தாபித்து ராதாவினோத்ஜி என்று பெயரிட்டு தன்னாலியன்றவரை அவனுக்கு ஸேவை செய்து வந்தார். ஆனால் வினோத்ஜி மிகவும் உல்லாஸமான பேர்வழி. அடிக்கடி விலையுயர்ந்த வஸ்த்ரங்கள், இனிப்புகள், வாசனை திரவியங்கள் வேண்டுமென்று கேட்பான். பாவம் வனசராம்ஜியால் அவனது தேவைகளை பூர்த்தி செய்ய முடியாமல் திணறுவார். சிலசமயம், தானே நிறைவேற்றுவார். அவரால் முடியவில்லையென்றால் வினோத்ஜி பிறரை யாரையாவது ப்ரேரணை செய்தாவது தன் விருப்பங்களை நிறைவேற்றிக்கொள்வான். சிலசமயம் அவனே திருடியாவது எடுத்துக்கொள்வான்.

ஒரு சமயம் வினோத்ஜி, கடுகு செடியின் புஷ்பங்களால் செய்யப்படும் ஒருவிதமான தின்பண்டத்தை உண்ண விரும்பினான். பூக்களுக்கு எங்கே செல்வது? அவனே மாலை மங்கியதும் ஒரு கடுகு தோட்டத்துக்குள் நுழைந்து பூக்களைப் பறிக்கலானான். அந்த தோட்டத்து சொந்தக்காரன் வயலில் யாரோ நடக்கும் சத்தம் கேட்டு ''யாரது'' என வினவ வினோத்ஜி தன் பீதாம்பரத்தில் பூக்களைக் கட்டிக்கொண்டு ஓடிவிட்டான். அன்று இரவு வினோத்ஜி, வனசராம்ஜியின் கனவில் தோன்றி, ''நான் கடுகு பூக்கறி சாப்பிட்டு ரொம்ப நாட்கள் ஆகிவிட்டன. எனக்கு இன்று அதை நைவேத்யம் செய்'' என்றான். வனசராம்ஜிக்கு கடுகு புஷ்பத்திற்கு எங்கு செல்வது என்றே புரியவில்லை. ஏனெனில், அருகாமையில் எங்கும் கடுகு பயிரிடும் வயல் கிடையாது. அவருக்கு ஒரே கவலையாகிவிட்டது. காலையில் வினோத்ஜியின் காதுகளில் கடுகு புஷ்பம் குண்டலமாகவும்

பீதாம்பரத்தில் கடுகு புஷ்பம் முடிந்து வைத்திருப்பதையும் கண்டு அவர் ஆச்சர்யத்தின் எல்லையை அடைந்தார். வினோத்ஜியே பூக்களை எங்கிருந்தோ தனக்காக கொண்டு வந்துள்ளார் என்று அறிந்துகொண்டார். உடனே பூக்களை எடுத்துக்கொண்டு வினோத்ஜி நியமித்ததுபோல் அதைப் பக்குவம் செய்து நைவேத்யம் செய்தார்.

வினோத்ஜியை முதலில் உபாஸனை செய்த பக்தன் சாஸ்த்ரோத்தமான உபாஸனை தெரியாமல் இருந்தவன் போலும்! அவன் ஹுக்கா பிடிக்கும் சமயம் அன்புடன் வினோத்ஜிக்கும் முதலில் ஹுக்காவை காண்பித்துவிட்டு அவன் ஹுக்கா பிடிப்பானாம். வினோத்ஜியும் அவன் அன்புடன் அதைத் தருவதால் அதை ஏற்றுக்கொண்டு விடுவானாம். இப்படி அவனுக்கு ஹுக்கா பிடிக்கும் வழக்கமும் வந்து சேர்ந்துவிட்டது. ஒரு பணக்கார பக்தனின் கனவில் வினோத்ஜி தோன்றி ''நான் ஹுக்கா பிடித்து நாட்களாகி விட்டது. எனக்கு ஹுக்கா வேணும்'' என்று கேட்டானாம்.

உடனே அவன் வனசராம்ஜியிடம் வந்து ஒரு வெள்ளி ஹுக்காவை சமர்ப்பிக்க, தினமும் காலையில் மாலையும் ராஜபோகி முடிந்த பிறகு வினோத்ஜிக்கு ஹுக்காவும் சமர்ப்பிக்கப்பட்டது. பாக்யமுள்ள சில அந்தரங்க பக்தர்களுக்கு வினோத்ஜி ஹுக்கா இழுக்கும் சப்தம் கேட்குமாம்!

வனசராம்ஜி மிகவும் தயாள ஸுபாவம் கொண்டவர். கிராமத்திற்கு யார் வந்தாலும் உபசரித்து அன்னமிடுவார். தங்க விரும்பினால் தங்கவைத்துக்கொண்டும் உபசரிப்பார். ஒருநாள் அவர் தூங்கும் சமயம் மூன்று விருந்தாளிகள் கதவைத் தட்டினர். வினோத்ஜிக்கு வனசராம்ஜியின் தூக்கம் கெடுவதில் இஷ்டமில்லை. அவனே ஒரு பாலகனாக கதவைத் திறந்து அவர்களை வரவேற்று ''அப்பா தூங்குகிறார் பாவம்! உங்களுக்கு அவசியமானால் அவரை எழுப்புகிறேன். இல்லாவிட்டால் நான் உங்களுக்கு பொருட்கள் எல்லாம் தருகிறேன். நீங்களே உங்களுக்கு உணவு தயாரித்துக் கொள்ளுங்கள்'' என்றான்.

வந்தவர்கள் பாலகனின் பேச்சில் மயங்கி, ''வேண்டாம் வேண்டாம்! அப்பாவை எழுப்பாதே! நாங்களே உணவு தயாரித்துக் கொள்கிறோம்'' என்றனர். வனசராம்ஜி மளிகை சாமான்கள் வாங்கும் கடைக்குச் சென்று பாலகன், ''வனசராம்ஜி என்னை அனுப்பினார்.

தயவுசெய்து பொருள்கள் தாரும்'' என்றான். கடைக்காரன் ''உன்னை நான் இன்றுவரை பார்த்ததே இல்லையே. உன்னைப்போல் ஒரு பையன் வனசராம்ஜிக்கு இருப்பதாக கேட்டதுமில்லையே. நான் எப்படி மளிகை சாமான்கள் தருவது'' என்றார். உடனே, வினோத்ஜி தன் கையிலிருந்த தங்க வளையளைக் கழற்றிக்கொடுத்து, ''இதை வைத்துக்கொள். வனசராம்ஜி பணம் தந்ததும் இதை அவரிடம் திருப்பித் தந்துவிடு'' என்று கூறி மளிகைப் பொருட்களைப் பெற்றுக்கொண்டு வீட்டிற்கு வந்த விருந்தாளிகளிடம் தந்தான். அவர்களும் சமைத்து உண்டு ஆனந்தமாக உறங்கினார்கள்.

அடுத்த நாள் காலையில் வனசராம்ஜி வீட்டில் உறங்கும் விருந்தாளிகளைக் கண்டு வியந்தார். அவர்கள் எழுந்தவுடன், ''நீங்கள் யார், எப்போது வந்தீர்கள், கதவை யார் திறந்தார்கள்'' என்றெல்லாம் கேட்டார். ''நாங்கள் வந்த சமயம் நீங்கள் அயர்ந்து உறங்கிக்கொண்டிருந்தீர்கள். உங்கள் மகன் கதவைத் திறந்து எங்களுக்கு சகல வசதிகளும் செய்து கொடுத்தான். எப்பேர்ப்பட்ட பாக்யசாலி நீங்கள், இப்படிப்பட்ட சத்புத்ரனை பெற்றிருக்கிறீர்கள்'' என்ற கொண்டாடினார்கள்.வனசராம்ஜி திகைத்துப் போனார். இது நிச்சயம் வினோத்ஜியின் லீலைதான் என்று புரிந்துகொண்டார். அன்று பகலில் கையில் வளையளுடன் கடைக்காரர் வனசராம்ஜி வீட்டிற்கு வந்ததும் இது இன்னும் ஊர்ஜிதமாயிற்று.

வினோத்ஜிக்கு இப்பொழுது தனியாக இருந்து அலுத்துவிட்டது. அவனுக்கு கல்யாணம் செய்துகொள்ள வேண்டும் என்ற ஆசை. அதைப்பற்றி வரும் இதழில் பார்ப்போமா.

(தொடரும்)

- ஜயந்தி ஜானகிராமன்

---

நோய்வாய்ப்பட்ட ராஜா, பூ மண்டலத்திற்கே அதிபதியாக இருந்தாலும், அவனை நோயிலிருந்து காப்பாற்றிய வைத்யன் அவனைவிட சிறந்தவனாகிறான். அதேபோல், ஞானம் ராஜாவாக இருந்தாலும், அது கலியென்ற நோயினால் பீடிக்கப்பட்டு இருப்பதால், அந்த நோயைப் போக்கக்கூடிய நாமகீர்த்தனம் தான் ஞானத்தைவிட சிறந்தது.

-பகவந்நாம ரஸோதயத்தில்

**ஸ்ரீ பகவந்நாம போதேந்திரஸ்வாமிகள்**

# ஸ்ரீ ஸ்வாமிஜியின் ஸம்பாஷணைகளிலிருந்து - 89

*தீரமிலகத்திற் றேடியுந் தனையான்*
*திரும்பவுற் றேனரு ளருணாசலா* (தொடர்ச்சி)

ஸாதாரண சமயங்களில் மனதானது எவ்வளவு அலைபாய்கிறது என்று ஒருவருக்கும் தெரிவதில்லை. யாரும் அதைப்பற்றி கவலைப்படுவதுமில்லை. நடைபாதையில் நடந்து செல்லும்பொழுதும், அலுவலகத்தில் வேலையில் ஈடுபட்டிருக்கும்பொழுதும் மனதானது சலனப்பட்டுக்கொண்டுதான் இருக்கிறது. சிறிது நேரம் நாம் ஜபம் செய்வதற்கோ, தியானம் பழகுவதற்கோ அமரும்பொழுதுதான் மனது எவ்வளவு சஞ்சலப்படுகிறது என்பது நமக்குத் தெரியவருகிறது.

ஹ்ருதயத்தில் பகவான் நித்யஸித்தமாக பிரகாசித்துக்கொண்டு இருக்கிறார். பகவானை தெரிந்துகொள்வதற்காக பார்வையை உண்முகமாகத் திருப்பி, மனதை சிறிது ஒடுக்கினால் அது வெளியில் ஓடிவிடுகிறது. ஆக, பகவானை ஹ்ருதயத்தில் தரிசனம் செய்ய நமக்கு விவேகமோ, வைராக்யமோ, பக்குவமோ இல்லை.

இப்படிப்பட்ட மனதை அடக்குவதற்குத்தான் நமது வேதாந்த மதத்தில் பலவிதமான உபாயங்களை சொல்கின்றனர். இதில் ரமண மஹரிஷிகளின் அபிப்ராயம் என்னவென்றால், சஞ்சல ஸ்வரூபமாயுள்ள மனதிடம் ஏதாவது ஒரு ஸ்வரூபத்தை கொடுத்தால் (ஒரே ஸ்வரூபத்திடம் மனதை செலுத்தினால்) அந்த மனது அமைதியாகிவிடுகிறது. அந்த ஸ்வரூபத்தில் மனது ஏகாக்ரமடைகிறது. இது எப்படியென்றால், யானையுடைய தும்பிக்கையானது ஸதா ஆடிக்கொண்டு இருக்கும். இதைப் பார்க்கும் பாகன் (Weight-ஆக) பளுவாக உள்ள சங்கிலியை யானையின் துதிக்கையில் கொடுத்து விடுவான். அதுவரையில் ஆடிக்கொண்டிருந்த தும்பிக்கை சங்கிலி கொடுத்தவுடன் நின்றுவிடும். இதை கோயில்களில் பார்க்கலாம். அதுபோல்தான், மனதை ஒருமுகமாக ஒரு ஸ்வரூபத்திடம், ஒரு ஸ்வாமியிடம் செலுத்தினால் மனது ஏகாக்ரமடைந்து அமைதியாகிறது.

ஞானத்தை அடைய இருவர் முயற்சி செய்கின்றனர். ஒருவர் இப்பொழுதுதான் வேதாந்த மார்க்கத்தைப் பற்றி கேள்விப்பட்டு, நேரடியாக ஆத்மவிசாரம் பயில்கிறார். அவருக்கு சுலபத்தில் ஆத்மவிசாரம் சித்திக்காது. மற்றொருவர் பிறவியிலிருந்தே தீர்த்த யாத்திரை, க்ஷேத்ராடனங்கள் (புனிதத்தலங்களும், புண்ய தீர்த்தங்களுக்கும் செல்லுதல்) செய்துவந்து, ஆசாரத்துடன் நித்ய அனுஷ்டானங்களையும் கடைப்பிடித்து வந்து, நாமஸங்கீர்த்தனம் விடாமல் செய்து, பகவத்பக்தியுடன் வாழ்ந்து வருகிறார். அவர் ஆத்மவிசாரம் பயின்றால் சுலபத்தில் சித்திக்கும். காரணம், ஏற்கனவே பக்தியால் மனது சுத்தமாக இருக்கிறது. முந்தையவரோ லௌகீகத்தில் தனதிஷ்டப்படி வாழ்ந்துவிட்டு, இப்பொழுது தான்ஆத்மவிசாரம் செய்ய முயல்கிறார். சிரமப்பட்டாலும், அது அவருக்கு சித்திக்காது.

யாருக்கு தீரம் (வீரம்) உள்ளதோ, அவரே பார்வையை உண்முகமாகத் திருப்பி, பகவானை ஹ்ருதயத்தில் தர்சனம் செய்ய முடியும். ஏனைய சாதாரண மக்களால் இயலாது. அப்படிப்பட்ட சாதாரண மக்களும் ஒரு உத்தமமான ஜீவன்முக்தரின் அனுக்ரஹத்தினால் பகவானை உணர முடியும். ஒருவன், மனதை முழுவதுமாக அழித்த ஞானியிடம் சரணாகதி செய்வானாகில், அவனுடைய அகங்காரமானது நடுங்கி நாசமாகிவிடும்.

மஹாத்மாக்களிடம் பழகிப்பார்த்தால் இது தெரியும். அவர்கள், அனைவரிடமும் இனிமையாகவும், உற்சாகத்துடனும் பழகுவர். நம்முடனே இருந்து, தூங்கி, பேசி, சாப்பிட்டு இருப்பர். இருப்பினும் மறுநாள் காலையில் அவரை தரிசனம் செய்யச் செல்லும்பொழுது ஒரு பயம் நம் மனதில் ஏற்படும். நேற்றுவரை சாதாரணமாக நம்மிடம் பழகியவர் இன்று அப்படி இருக்கமாட்டாரா என்ன? பயம் நம் மனதில் தோன்றுவதற்கு, அவரிடம் இருக்கும் தேஜஸும், நம்மிடம் இருக்கும் குற்றங்களும்தான் காரணம்.

அப்படிப்பட்ட உயர்ந்த ஜீவன்முக்தரிடம்தான் சரணாகதி செய்ய வேண்டும்.

(தொடரும்)

# செய்திகள்

ஜனவரி 15-ந் தேதி வரை

சென்னை பிரேமிகபவனத்திலும், மஹாரண்யம் ஸ்ரீ கல்யாண ஸ்ரீநிவாஸபெருமாள் திருக்கோயிலிலும் தனுர் மாத பூஜை நடைபெற்றது.

ஜனவரி 2-ந் தேதி முதல் 11-ந் தேதி வரை

சென்னை பிரேமிகபவனத்தில் அத்யயன உத்ஸவம் நடைபெற்றது. 11-ந் தேதி அன்று ஆண்டாள் கல்யாணமும், வேத, பிரபந்த சாற்றுமுறையும் நடைபெற்றது.

ஜனவரி 2-ந் தேதி முதல் 10-ந் தேதி வரை

மதுரபுரி ஆஸ்ரமத்தில் கீர்த்தனாவளி பஜனை நடைபெற்றது. ஜனவரி 10-ந் தேதி அன்று ஆண்டாள் கல்யாணம் நடைபெற்றது.

ஜனவரி 4-ந் தேதி முதல் 10-ந் தேதி வரை

பரனூர் ஸ்ரீ பக்தகோலாஹலன் ஸன்னதியில் நமது ஸாந்தீபனி குருகுல வித்யார்த்திகளின் யஜுர் வேத பதபாராயணம் நடைபெற்றது.

ஜனவரி 13-ந் தேதி

ஏகாதசியை முன்னிட்டு மதுரபுரி ஆஸ்ரமத்திலும், சென்னை ப்ரேமிகபவனத்திலும் இரவு அகண்ட 'ஹரே ராம....'' நாமகீர்த்தனம் நடைபெற்றது.

ஜனவரி 15-ந் தேதி

கன்யாகுமரி, மாயம்மா ஸமாஜம் வெள்ளிவிழா நிகழ்ச்சியில் ஸ்ரீ ஸ்வாமிஜி கலந்துகொண்டு உபன்யாஸம் நிகழ்த்தினார்கள்.

ஜனவரி 22-ந் தேதி

சென்னை பிரேமிகபவனத்தில் திருவையாறு தியாகராஜ ஸ்வாமிகளின் ஆராதனையை ஒட்டி ஸ்ரீ ஸ்வாமிஜி, ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமிகளைப் பற்றி உபன்யாஸம் செய்தார்கள்.

புதுக்கோட்டையில் நாமஸங்கீர்த்தனம்

புதுக்கோட்டையில் ஸ்ரீ நரசிம்மன் மற்றும் ஸ்ரீ சுந்தரேசன் அவர்கள் தலைமையில் சங்கர மடத்தில் ''சைதன்ய மஹாப்ரபு நாமபிக்ஷா கேந்திரா'' சார்பில் ஒவ்வொரு ஞாயிறும் மாலை 4 மணி முதல் 5 மணி வரை ''ஹரே ராம......'' நாமஸங்கீர்த்தனம் நடைப்பெற்றுக்கொண்டு வருகின்றது. இதில் 35-40 பக்தர்கள் கலந்துகொள்கின்றார்கள்.

# பக்தர்களின் கவனத்திற்கு!

நமது மதுரபுரி ஆஸ்ரம வளாகத்திற்குள் தியானகூடமோ, தெய்வ பிரதிஷ்டையோ, அதிஷ்டானமோ எதுவும் கிடையாது. ஸ்ரீ ஸ்ரீ ஸ்வாமிஜி, ஆஸ்ரமத்தில் தங்கியிருக்கும் காலங்களில், மாதுரிஸகி ஸமேத ஸ்ரீ பிரேமிகவரதனுக்கு பூஜையும் ஸத்ஸங்கமும் நடைபெறும். ஆஸ்ரம வளாகத்திற்குள் யஜுர், ஸாம வேதபாடசாலை நடந்து வருகின்றது. சுமார் அறுபது வித்யார்த்திகள் வேதம் பயின்று வருகிறார்கள். ஆஸ்ரமத்தில், கைங்கர்யம் செய்து வருபவர்களும் அவர்களுடன் தங்கியுள்ளார்கள். வேதம் பயிலும் மாணவர்களுக்கு இடையூறு ஏற்படக்கூடாது என்ற நல்லெண்ணத்தில் ஸ்ரீ ஸ்வாமிஜி ஆஸ்ரமத்தில் தங்கியிருக்கும்பொழுது மட்டுமே பக்தர்கள் காலை 9 மணி முதல் 11 மணி வரையிலும், மாலை 4 மணி முதல் 6 மணி வரையிலும் தரிசனத்திற்கு ஆஸ்ரமத்திற்குள் அனுமதிக்கப்படுவார்கள்.

ஆஸ்ரம வளாகத்திற்கு பக்கத்திலேயே ஸ்ரீ ஸ்வாமிஜியால் ஸ்ரீ கல்யாணஸ்ரீநிவாஸபெருமாள் ஆலயம் நிர்மாணிக்கப்பட்டு நித்ய ஆராதனைகள் நடந்து வருகின்றது. தினமும், காலை 6.30 மணி முதல் 11.30 மணி வரையிலும் மாலை 5 மணி முதல் 8 மணி வரையிலும் கோவில் திறந்திருக்கும். பக்தர்கள் இந்த நேரத்திற்குள் எப்பொழுதும் பெருமாளை ஸேவிக்கலாம்.

சென்னை K.K. நகரில் (ஜாபர்கான்பேட்டை) பிரேமிகபவனத்தில் ஸ்ரீ ஸ்வாமிஜி இருக்கும் சமயத்தில் அவரை காலை 8 மணி முதல் 10 மணி வரையிலும் மாலை 5.30 மணி முதல் 8.30 மணி வரையிலும் தரிசனம் செய்யலாம். ஸ்ரீ ஸ்வாமிஜியை தரிசனம் செய்யும்பொழுது அவரிடமிருந்து பகவந்நாம உபதேசம் பெற்றுக்கொள்ள விரும்புபவர்கள் பெற்றுக்கொள்ளலாம்.

ஒவ்வொரு மாதமும் மதுரமுரளி இதழில் ஸ்ரீ ஸ்வாமிஜி, அந்த மாதத்தில் எங்கு இருப்பார் என்ற விவரம் முன்கூட்டியே தெரிவிக்கப்பட்டுவிடும். இதைத்தவிர, மற்ற நேரங்களில் ஸ்ரீ ஸ்வாமிஜியை தரிசனம் செய்யவேண்டும் என்றால் முன் அனுமதி பெற்றுக்கொண்டு தரிசிக்கலாம்.

கடிதங்களை நமது நிர்வாக அலுவலகத்திற்கு "Personal Secretary To H.H. Sri Sri Muralidhara Swamiji" என்று அனுப்ப வேண்டும். கடிதங்கள் அனுப்ப வேண்டிய முகவரி கீழே தரப்பட்டுள்ளது. ஸ்ரீ ஸ்வாமிஜியின் உதவியாளருக்கே கடிதங்களை அனுப்ப வேண்டும. அவர் ஸ்ரீ ஸ்வாமிஜியிடம் தெரிவிக்க வேண்டிய செய்திகளைத் தெரிவிப்பார். நமது மிஷனிற்கு E-mail address உள்ளது. ஸ்ரீ ஸ்வாமிஜிக்கு தனிப்பட்ட E-mail address கிடையாது.

கடிதங்கள் அனுப்ப வேண்டிய முகவரி :

**"**Personal Secretary to **H.H. Sri Sri Muralidhara Swamiji"**
**Guruji Sri Muralidhara Swamigal Mission,**
Premika Bhavanam,
New No.2, (Old No.24)
Netaji Nagar, Jafferkhanpet,
Chennai - 600 083.
E-mail : contact@madhuramurali.org

## அறிவிப்பு

1. ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள், சென்னை மேற்கு மாம்பலம் அயோத்யா அச்வமேத மஹாமண்டபத்தில், 7-2-03 முதல் 13-2-03 வரை உபன்யாஸம் நிகழ்த்த இருப்பதால், மஹாரண்யம் ஸ்ரீ கல்யாண ஸ்ரீநிவாஸபெருமாளின் வார்ஷிக ப்ரதிஷ்டாதின மஹோத்ஸவத்தைத் தொடர்ந்து, 06-2-03 முதல் 12-2-03 வரை நடைபெற இருந்த பஜனைஸப்தாஹம் தற்பொழுது தள்ளி வைக்கப்பட்டுள்ளது.
2. மார்ச் மாதம் 1-ந் தேதி மஹாசிவராத்திரியை முன்னிட்டு வடவாம்பலம் ஸ்ரீ ஆத்ம போதேந்த்ராள் அதிஷ்டானத்தில் நம் மிஷன் சார்பில் அபிஷேக ஆராதனை நடைபெறும். ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் 28-2-02 முதல் 4-3-03 வரை மதுரை ஸ்ரீ மதன கோபாலஸ்வாமி கோவிலில் உபன்யாஸம் நிகழ்த்த இருப்பதால், 1-3-03 அன்று ஆத்மபோதேந்த்ராள் அதிஷ்டானத்தில் நடைபெறும் அபிஷேக ஆராதனங்களில் சுவாமிஜி கலந்து கொள்ளமாட்டார்கள்